Date : 12.08.2026

எனது அருமை இந்திய மக்களே

நீட் தேர்வு என்னைப் பொறுத்த மட்டில் தேவையானது. இது இல்லை என்றால் அரசியல்வாதிகள் மெடிக்கல் சீட்டுகளை விற்று கொள்ளை லாபம் அடித்திருப்பார்கள். நீட்தேர்வில் வாங்கிய மதிப்பெண்களோடு +2 தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களுக்கு கீழ்க்கண்டவாறு போனஸ் மதிப்பெண்கள் கொடுத்து அதை எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களோடு சேர்த்து அந்த மாணவர் பெற்ற மதிப்பெண்களைக் கணக்கிடலாம்.

1. +2 தேர்வில் 80 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கிய மாணவர்களுக்கு 25 போனஸ் மதிப்பெண்கள்
2. +2 தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு மேல் 80 மதிப்பெண்களுக்குக்கீழ் வாங்கிய மாணவர்களுக்கு 20 போனஸ் மதிப்பெண்கள்
3. +2 தேர்வில் 60 மதிப்பெண்களுக்கு மேல் 70 மதிப்பெண்களுக்கு கீழ் வாங்கிய மாணவர்களுக்கு 15 போனஸ் மதிப்பெண்கள் என்று வழங்கி - இந்த போனஸ் மதிப்பெண்களை அந்த மாணவர்கள் எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களோடு கூட்டி அந்த மாணவரின் மொத்த மதிப்பெண்களை கணக்கிட வேண்டும். இப்படி செய்தால் யாருக்குமே அநீதி ஏற்படாது. எந்த மாணவரும் தற்கொலை செய்யும் நிலை ஏற்படாது. தேர்வு முறைகேடுகளும் நடக்காது. வினாத்தாள் கசிவும் ஏற்படாது. புற்றீசல்கள் போல Coaching சென்டர்களும் பெருகாது. ஜெய் பாரத்.

*ஜெய் பாரத்*

*ஜெய ஜெய பாரத் ஜெய ஜெய பாரத்*

*வந்தே மாதரம் வந்தே மாதரம்*

*இன்குலாப் ஜிந்தாபாத்*

*இன்குலாப் ஜிந்தாபாத்*

C.M.Raju, the Chalukkiyian,
Founder of “We for Red India”

தேதி: 12.08.2026

எனது அருமை இந்திய மக்களே,

கர்நாடகா அரசு தனது மாநிலத்தில் காவிரி ஆற்றின் மேல் மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதை தமிழ்நாட்டு மக்கள் "கட்டக்கூடாது" என்று சொல்லுவதற்கு உரிமை இல்லை. தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்கு காவிரி நதிநீர் ஆணையம் நிர்ணயித்து உள்ள அளவுக்குக் குறைவாக கர்நாடகா அரசு நதிநீர் வழங்கினால் மட்டுமே அதை எதிர்க்க உரிமை உள்ளது. கர்நாடகா அரசு தனது நிலப்பரப்பில் காவிரி நதியின்மீது ஆயிரக்கணக்கான அணைகள் கட்ட உரிமை உள்ளது. அதைத் தமிழ்நாடு தடுக்கமுடியாது. கர்நாடகா அரசு காவிரி ஆற்றின்மீது அணைகள் கட்டி நீரை சேமிப்பது போல தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தமிழ்நாட்டில் ஓடும் காவிரி நதிமீது அணைகள் கட்டி நீரை சேமித்தார்களா? கேளுங்கள். மேட்டூர் அணை வெள்ளைக்காரர்களால் கட்டப்பட்டது. இலவசங்களைக் கொடுத்து மக்களின் ஓட்டுக்களை கொள்ளை அடிக்கத் தெரிகிறது தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு. காவிரி நதியின் மீது அணைகளை கட்டி நீரை சேமிக்கத் தெரியவில்லை தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு. மழை வெள்ளக் காலங்களில் கர்நாடகா அரசு அணையில் இருந்து திறந்துவிடும் காவிரி நீரைக் கணக்கிட்டால், தமிழ்நாட்டுக்காரர்கள் அடுத்த 50 - 60 ஆண்டுகளுக்கு கர்நாடகாவிடமிருந்து காவிரி நீரை கேட்கவே முடியாது. அணைகள் கட்டி நீரை சேமிக்காதது தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் குற்றம். ஜெய் பாரத்.

*ஜெய் பாரத்*

*ஜெய ஜெய பாரத் ஜெய ஜெய பாரத்*

*வந்தே மாதரம் வந்தே மாதரம்*

*இன்குலாப் ஜிந்தாபாத்*

*இன்குலாப் ஜிந்தாபாத்*

C.M.Raju, the Chalukkiyian,
Founder of "We for Red India"